[30th April 1960

SRI A. VEDARATHNAM: ஆண்டுதோறும் நடைபெறுகிற அகில இந்திய ஆதாரக் கல்வி மகாநாட்டுக்கு நம் அரசாங்கத்தின் பிரதிநிதிகளை அனுப்புகிறார்களா? அப்படியானால் அதன் விவரம் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM: அனுப்புகிறார்கள் என்பது என் ஞாபகம். முழு விவரம் வேண்டுமென்றால் தனியாகக் கேள்வி போட வேண்டும்.

Corruption charge against an Ex-D.S.P.

* 893 *Q.*—SRI M. P. SUBRAMANYAM: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the charges of corruption made against an Ex-District Superintendent of Police, Salem, have been enquired into; and

(*b*) if so, the result thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) It will not be in the public interest to disclose the information at this stage.

Bifurcation of Education Department

* 894 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR: Will the Hon. the Minister for Finance be pleased to state with reference to the recommendation of the Secondary Education Commission, whether there is any proposal to bifurcate the Education Department into Secondary and Collegiate Education under different heads?

THE HON. SRI C. SUBRAMANIAM: No, Sir.

SRI K. SATTANATHA KARAYALAR: ஆண்டுதோறும் கல்வி இலாகாவின் வேலை பளு அதிகரித்துக்கொண்டே வருகிறதனால் இதைச் சீரமைப்பதற்கு, பைபர் கேட் பண்ணுவதற்குப் பரிசீலனை செய்வார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்போது சமீபத்தில் லீகல் எஜுகேஷனை இதிலிருந்து பிரித்துத் தனியாக வைத்திருக்கிறோம். அவ்வாறே டெக்னிகல் எஜுகேஷனையும் பிரித்துத் தனியாக ஒரு டைரெக்டர் போட்டு இருக்கிறோம். இன்னும் வேலை பளு அதிகமாக இருக்கிறதென்று தெரிந்தால் அதை எப்படி மாற்றி அமைப்பது என்பது யோசிக்கப்படும்.

Country chekkus

* 895 *Q.*—SRI A. VEDARATHNAM: கனம் உள்விவகார அமைச்சர்அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) வேதாரண்யம் வட்டார வளர்ச்சித் துறையில் நாட்டு செக்கு உற்பத்தித் தொழில் எப்போது துவங்கப் பட்டது?

(ஆ) எத்தனை செக்குகள் செய்யப்பட்டன?